**Deposition of Witness**

**In the Court of the Judicial Magistrate No.II, Kovilpatti.**

**Case No : C.C.No. 510/2015**

**PW - 1** **07/08/2023**

| | |
|---|---|
| **Name** | சிவசெந்தில்குமரன் |
| **Father's Name** | தினகரன் |
| **Village** | மதுரை |
| **Taluk** | மதுரை |
| **Caste** | -- |
| **Calling** | தனியார் நிறுவனம் |
| **Religion** | இந்து |
| **Age** | 35 |

(Accused present. )

**முதல் விசாரணை**

1. நான் மதுரையில் குடியிருந்து வருகிறேன். தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவில் கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியாது. வழக்கின் விபரங்கள் எனக்கு முழுமையாக தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. **புகார் மனுவில் உள்ள கையெழுத்து மட்டும் அ.சா.ஆ– 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கக்கோரி அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

**1.** கடந்த 11–10–15 ம் தேதி இரவு 9.30 மணியளவில் நான் வேலை பார்த்த E com Express கொரியர் நிறுவனத்தை பூட்டி விட்டு வீட்டிற்கு சென்றுவிட்டோம், மறு நாள் காலை வந்து பார்த்த போது அலுவலகத்தின் கதவு உடைக்கப்பட்டு பணம் வைக்கும் பெட்டி திருடப்பட்டிருந்தது, அதனுள் ரூ. 3000/– இருந்தது, மேற்படி சம்பவத்திற்காக நான் கோவில்பட்டி மேற்கு காவல்நிலையத்தில் புகார் தெரிவித்தேன் என்று போலிசார்

விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u> – இல்லை**

மறு விசாரணை இல்லை

என்னால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு

தட்டச்சு செய்யப்பட்டு / எழுதப்பட்டு
சாட்சிக்கு / எதிரிக்கு படித்து காண்பிக்கப்பட்டு
அவரால் சரி என்று ஒப்புக்கொண்டு என் முன்
கையெழுத்து செய்தார்.

(ஒம்),B.பீட்டர்,
நீதித்துறை நடுவர் எண்.2,
கோவில்பட்டி.